## எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில்

# சூரியசக்தி மின்உற்பத்தி தொடக்கம்

சென்னை, மார்ச்.4-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் மெட்ரோ ரெயில் நிலையங்களில் சூரியசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிலையில், எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையத்தின் கூரை மேல் 330 கிலோவாட் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு, மின் உற்பத்தி தொடங்கியுள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் இதுவரை மொத்தம் சூரியசக்தி மூலம் 5.83 மெகாவாட் மின் உற்பத்தி செய்துள்ளது. மேலும் இந்த ஆண்டில் 8 மெகாவாட் சூரியசக்தி மின் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. அதன் பின்னர் ஆண்டுதோறும் 1 கோடியே 16 லட்சத்து 80 ஆயிரம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் எனவும் மெட்ரோ ரெயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ஆண்டுக்கு ரூ.2.54 கோடி சேமிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வெளிவரும் கரியமில வாயுவின் வெளியீடு அளவு ஆண்டுக்கு 11 ஆயிரத்து 587 டன் ஆக குறையும் என மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.